

நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) கரூர் மாவட்டம்

தாந்தோனி ஊராட்சி ஒன்றியம்

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், தாந்தோனி ஊராட்சி ஒன்றியம், மணவாடி ஊராட்சி மற்றும் கிராமம் நில அளவு எண்: 303/3எ3 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

கோப்பு எண் :

இணையதள விண்ணப்ப எண் : 8Z6JR5MT

அளவு திட்டம் : 1 : 400

வ

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பு:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	: 2267.00 ச.மீ (அ) 0.56 ஏக்கர்
கோரிய மனைகளின் எண்ணிக்கை	: 14
ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை	: 14
உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் பரப்பளவு மூலைமுடக்குகள் உட்பட	: 228.93 ச.மீ
மனைப்பிரிவின் எல்லை	
நிலையிலுள்ள சாலை	
மனுதாரர் உபயோகம் - 6.23 ச.மீ	

பொது ஒதுக்கீடுகள் (மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டவை) :

உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பளவு = 228.93 ச.மீ

அரசாணை எண் 18-ன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019-ன் படி பூங்கா ஒதுக்கீடு **10%** பரப்பளவு இடத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி தொகையினை மனுதாரரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம்:

(TNCDBR 2019, 47(8))-ன் படி மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டவை

(A) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பளவு:

உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பளவு : 14.63 ச.மீ - **(0.72%)**

(B) **TANGEDCO** -க்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பளவு:

TANGEDCO -க்கு ஒதுக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பளவு : 14.63 ச.மீ - **(0.72%)**

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ மூலைமுடக்கு விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள்:

1. அரசாணை எண் 18-ன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019-ன் படி உள்ள நிபந்தனைகள் கடைபிடிக்க வேண்டும்.

2. அரசாணை எண்:181-ன் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை ந.ப.4(1), நாள்: 09.12.2020-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. அரசாணை எண்:16-ன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் **(MA1)** துறை நாள்: 31.01.2020-ன்படி உள்ள நிபந்தனைகள் கடைபிடிக்க வேண்டும்.

4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், ஊராட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்/ஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

7. நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப்பத்திரம் - குத்தகை பத்திரம் - பட்டா - தானப்பத்திரம் - பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதைனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம்/விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

9. நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டபட வேண்டும்.

10. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பரிவு அனுமதி நெல்லத்தக்கது அல்ல.

11. இம்மனப்பரிவிலிருந்து அருகிலுள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அகற்றப்படல் வேண்டும்.

12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலைகளாக அமைக்கப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலர்/யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெற்ப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

13.தானப்பத்திரம் ஆவண எண்: 4419/2022, நாள்: 12.09.2022-ன் படி உத்தேச சாலைகள், பொதுஒதுக்கீடு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு (TANGEDCO) ஒக்கடைக்கப்பட்ட விவரம் உறுதி செய்யப்படுகிறது.

SWP/DTCP/KARUR/LAYOUT NO: 236 /2022

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கரூர் மாவட்டம்

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Karur
Date:2022.12.21 15:53:25